சென்னை 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம்

# பிரதமர் நரேந்திர மோடியிடம் முதலமைச்சர் நேரில் கடிதம்

## ◆ மத்திய அரசு பங்களிப்பு நிதியை உடனடியாக வழங்க கோரிக்கை

சென்னை, பிப். 11-

சென்னை இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்துக்கு மத்திய அரசு பங்களிப்பு நிதியை உடனடியாக வழங்க வலியுறுத்தி பிரதமர் நரேந்திர மோடியை முதலமைச்சர் எடப்பாடி கே.பழனி சாமி நேரில் சந்தித்து கடிதம் வழங்கினார்.

முதற்கட்ட சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இறுதிப் பகுதியாக A.G.- D.M.S. மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் வரையிலான 10 கிலோ மீட்டர் சுரங்க வழி மெட்ரோ ரயில் போக்குவரத்தை பிரதமர் நரேந்திர மோடி மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி ஆகியோர் நேற்று திருப்பூரிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, 118.9 கிலோ மீட்டர் தூரத்திற்கான இரண்டாம் கட்ட சென்னை மெட்ரோ ரயில் திட்டப் பணிகளை துவங்க உரிய முயற்சிகள் தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்டு வருகிறது. இரண்டாம் கட்ட திட்டத்தின் முதற்பகுதியாக 50 கிலோ மீட்டர் மெட்ரோ ரயில் கட்டமைப்புகளை உருவாக்கிட ஜப்பான் பன்னாட்டு நிதி நிறுவனம் ரூபாய் 20,196 கோடி கடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

இரண்டாம் கட்ட சென்னை மெட்ரோ ரயில் பணிகளுக்கும், முதற்கட்ட பணிகளைப் போல், மத்திய அரசு 50 சதவீத நிதிப் பங்களிப்பினை வழங்கிடவும், அத்திட்டப் பணிகளை துவக்குவதற்கு உரிய அனுமதியினை துரிதமாக வழங்கிடவும் வலியுறுத்தி முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி பிரதமர் நரேந்திர மோடியிடம் நேற்று நேரில் கடிதம் வழங்கினார்.

